R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

March 2020

## FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer's Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai St.,<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher's Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor's Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:29.02.2020 Signature of Publisher.

Cell : 94435 58041
6379350509
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com
Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

**Our TV Program:**

*Every Tuesday 6.00 P.M on Tamilan TV & Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202. Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 20 மார்ச் 2020 கனி 4




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்




# வேதபாடம்


"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்;
அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று
எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச்
சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 4
தலைப்பு : ஜீவபுஸ்தகம் - The Book of Life
வேத வாசிப்பு : சங்.69:21-30

| | |
|---|---|
| 1. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவர்கள்பேர் | - சங்.69:28 |
| (எ.கா) மோசே உம்முடைய | - யாத்.33:32 |
| 2. பிரயாசப்பட்டவர்களுடைய நாமங்கள் | - பிலி.4:3 |
| (எ.கா) ஜெயங்கொள்ளுகிறவன் | - வெளி.3:5 |
| 3. ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்படாதவர்கள் | - வெளி.13:8 |
| (எ.கா) ஆச்சரியப்படுவார்கள் | - வெளி.17:8 |
| 4. எழுதப்பட்டவைகளின்படியே | - வெளி.20:12 |
| (எ.கா) ஆட்டுக்குட்டியானவரின் | - வெளி.21:7 |

**வசனத்தை எடுத்துப்போட்டால் – வெளி.21:19**


YouTube




the word of christ
இருபத்து நான்கு மணிநேரமும்
உலகமெங்கும்
YouTube
வழியாக
பார்த்து சத்தியத்தை
அறிந்துகொள்ளுங்கள்
தொடர்புக்கு
9443558041
6379350509



**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA





## வேத அறிவுப் போட்டி எண்: ௨௨௫

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது என்று எழுதிய அப்போஸ்தலன் யார்?
2. எந்த நகரத்தின் ஜனங்கள் பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள்?
3. எல்லாவற்றிற்கும் முந்தினவர் எவர்?
4. ஒரு வயது கன்றுக்குட்டிகளைக் கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்டுமோ? என்று கேட்ட தீர்க்கன் யார்?
5. சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை என எந்த சபைக்கு பவுல் எழுதினார்?
6. அவர்கள் சம்பூரணமடைந்து அநேகராயிருந்தாலும் அறுப்புண்டு போவார்கள் என்று எந்த தீர்க்கனைக் கொண்டு கர்த்தர் சொன்னார்?
7. இன்னவிதமாய் எங்களைப் பின்பற்றவேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே என எந்த சபைக்கு பவுல் எழுதினார்?
8. சந்திரனும் சூரியனும் தன்தன் மண்டலத்தில் நின்றன என தேவனை நோக்கி எந்த தீர்க்கன் விண்ணப்பம் பண்ணினான்?
9. ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே என பவுல் யாருக்கு எழுதினார்?
10. வீடுகளின்மேல் வானசேனையையும் பணிகிறவர்களையும் சங்காரம்பண்ணுவதாக, கர்த்தர் எந்த தீர்க்கனைக் கொண்டு பேசினார்?

## வேதாகம ஆய்வு... 20




ஆதாம் - Adam

1. முதல் மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்.
2. தேவன் ஆதாமை ஆவி, ஆத்மா, சரீரமுள்ளவனாக சிருஷ்டித்தார்.
3. அவனிலிருந்து ஏவாள் சிருஷ்டிக்கப்பட்டாள்
4. அநேகத்திற்கு பெயரிட்டான் – ஆதி.2:19
5. பாவம் அவர்களை மறைக்கச்செய்தது – ஆதி.3:8
6. 130 வயதில் ஒரு குமாரனைப் பெற்றான் – ஆதி.5:3
7. 930 வயதில் ஆதாம் மரித்தான்

சிறுவர் பகுதி

## அரண்மனை உப்புத்தின்று ஆண்டவருக்கு விரோதமானவர்கள்

வேத பகுதி:எஸ்றா 4:1-24



**பா**பிலோனிலே நேபுகாத்நேச்சார் என்ற ஒரு ராஜா தேவஜனங்களை சிறைபிடித்தான். இவர்கள் வெகுநாட்கள் சிறைவாசிகளாக இருந்த பின்பு விடுவிக்கப்பட்டார்கள். சிறையிலிருந்து வீடு திரும்பின தேவஜனங்களாகிய யூதர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியுமா? இடிக்கப்பட்ட தங்களுடைய தேவனுடைய ஆலயத்தையும் பட்டணத்தின் அலங்கங்களையும் கட்ட ஆரம்பித்தனர். அப்பொழுது நதிக்கு அப்புறத்தில் உள்ள தேவனை அறியாத புறஜாதி மக்களும் வந்து நாங்களும் உங்களோடு சேர்ந்து கட்ட வருகிறோம் என்றார்கள். அதற்கு யூதர்கள், தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்கள். அதினால் அந்த தேசத்து ஜனங்கள் யூதர்களுக்கு விரோதமாக எழும்பி ஆலயத்தைக் கட்ட தடை செய்ய கோரி அர்தசஷ்டா என்ற ராஜாவுக்கு கடிதம் எழுதி அனுப்பினார்கள்.

என்ன எழுதினார்கள் தெரியுமா? நதிக்கு இப்புறத்தில் இருக்கிற உமது அடியார் முதலானவர்கள் அறிவிக்கிறது என்னவென்றால், உம்மிடத்திலிருந்து எங்களிடத்திற்கு வந்த யூதர் எருசலேமிலே கூடி கலகமும் பொல்லாப்புமான அந்தப் பட்டணத்திற்கு அஸ்திபாரம் போட்டு, அதின் மதில்களை எழுப்பிக்கட்டுகிறார்கள் என்று ராஜாவுக்கு தெரியவருவதாக, இப்பொழுதும் இந்தப் பட்டணம் கட்டப்பட்டு, அலங்கங்கள் எழுப்பிக்கப் பட்டுத்தீர்ந்தால், அவர்கள் பகுதியையும் தீர்வையையும் கொடுக்கமாட்டார்கள் அதினால் ராஜாக்களின் வருமானத்திற்கு நஷ்டம் வரும் என்று தெரியவருவதாக. இப்பொழுதும் நாங்கள் அரண்மனை உப்புத்தின்கிறபடியால் ராஜாவிற்கு இதைத் தெரியப்படுத்துகிறோம் என்றார்கள். இதை வாசித்த ராஜா தீர்க்க விசாரிக்காமல் உடனே அந்தப் பட்டணத்தை கட்டாமல் நிறுத்திவிடும்படி கட்டளையிடுங்கள் என்று எழுதி அனுப்பினான். அந்த நகலை அந்த ஜனங்கள் எடுத்துக்கொண்டு தீவிரமாக சென்று எருசலேமிலே கட்டடவேலை செய்து கொண்டிருந்த தேவஜனங்களை பலவந்தத்தோடும் கட்டாயத்தோடும் வேலை செய்யாதபடிக்கு நிறுத்திப்போட்டார்கள்.

பார்த்தீர்களா! ஆண்டவருடைய ஆலயத்தை கட்ட வருகிறோம் என்றவர்களே ஆலயத்தை கட்ட தடையாக மாறினார்கள். காரணம் தங்களை கட்ட அனுமதிக்காததே. அதைப்போல இன்றும் சபைகளில் தேவனை நன்கு அறியாதவர்கள் உள்ளே புகுந்து நாங்களும் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம் என்று பிரசங்கபீடம் வரை ஏறி வசனத்தால் குத்தப்பட்டு மனந்திரும்பாமல் அப்பீடத்திற்கே துரோகிகளாக மாறி ஊரெல்லாம் சென்று சபையைப்பற்றி தூற்றுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

**மனப்பாட வசனம்:**

“சீயோனைப் பகைக்கிற அனைவரும் வெட்கிப்பின்னிட்டுத் திரும்பக்கடவர்கள்”

சங்கீதம் 129:5

‘ தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ’ மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 20 மார்ச் -2020 கனி - 4

ஆசிரியருரை

## மீதியான இஸ்ரவேலர்
## The Remnant of Israel



**இ**ஸ்ரவேலர் மிகுந்த ஜனக்கூட்டமாக இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். எகிப்து ஜனங்கள் நம்மிலும் ஏராளமானவர்களும், பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள். அவர்கள் பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால், அவர்களும் நம்முடைய பகைஞரோடே கூடி, நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, தேசத்தை விட்டுப் புறப்பட்டுப்போகாதபடிக்கும் நாம் அவர்களைக்குறித்து ஒரு உபாயம் பண்ணவேண்டும் என்று சொல்லி அவர்களை சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கினார்கள் என்பதை நாம் யாத்திராகம புத்தகத்தில் படிக்கிறோம். அந்த அளவு இஸ்ரவேலர் பெருகினார்கள். இவ்வளவு பெருகினாலும் தேவன் இஸ்ரவேலில் மீதியான ஜனங்களையே அதிகமாக நேசித்தார். அதற்கு காரணம் என்னவென்றால்; "உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன் அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள். இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்வதில்லை; அவர்கள் பொய்பேசுவதுமில்லை; வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவது மில்லை; அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக் கொள்வார்கள்" (செப்.3:12,13) என்றெழுதப்பட்டுள்ளது. இந்த மீதியான இஸ்ரவேலரிடமிருந்து நாம் ஐந்து காரியங்களைக் கற்றுக்கொள்கிறோம்.

**1. கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருந்தார்கள்.** உலகமும் உலகப்பொருள்களுமே எங்கள் நம்பிக்கை என்று வாழ்ந்துகொண்டிருக்கிற கோடிக்கணக்கான ஜனங்கள் மத்தியில் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருந்தவர்கள் மீதியான இஸ்ரவேலர்கள். இன்றைக்கு சபைக்கு அநேகர் வரவில்லையென்றால் இருக்கிறவர்களிலும் சிலர் நின்றுவிடுவார்கள். அதில் மீதமானவர்கள் இருப்பார்கள், அவர்களே மீதியானவர்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையா யிருப்பவர்கள். "கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று எரேமியா புத்தகத்தில் படிக்கிறோம் (எரே.17:7). உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாயிருக்கிறது? நீங்கள் யாரை நம்பிக்கொண்டிருக்கிறீர்கள்? மனுஷனை நம்பி மோசம்போனவர்கள் இவ்வுலகத்தில் எண்ணிலடங்காதவர்கள். அதில் நீங்களும் ஒருவராயிருக்கலாம். தாவீது தமது சங்கீத புத்தகத்தில் "நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்"

என்கிறார் (சங்.91:2). இவரைப்போல உங்களுடைய தேவனை முழு நம்பிக்கையாக கொண்டிருக்கிறீர்களா? ஒருமுறை இஸ்ரவேல் ஜனங்களே பயந்துகொண்டிருந்தபோது; தாவீது கோலியாத் என்ற பெலிஸ்தனை நோக்கி: "நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்" என்றார் (1சாமு.17:45). கர்த்தருடைய நாமத்தினாலே சென்ற தாவீது அந்த பெலிஸ்தனை ஒரு கவண் கல்லினாலே விழச்செய்தார். கர்த்தருடைய நாமமே தாவீதுக்கு வெற்றியை தேடித்தந்தது. உங்களுடைய நம்பிக்கையும் கர்த்தருடைய நாமத்தில் இருக்குமானால் நீங்களும் வெற்றியடைவீர்கள்.

**2. இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்யவில்லை.** அநியாயக்காரர்கள் பெருகிக்கொண்டு போகிற காலத்தில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்யாமல் கர்த்தருக்குப் பயந்துநடந்தார்கள். நீங்கள் யாருக்காவது அநியாயஞ்செய்ததுண்டா? ஆண்டவர் இயேசுவைப் பற்றி வேதத்தில் படிக்கிறோம், மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல அவர் வாய்திறவாதிருந்தார். அவர் ஒருவருக்கும் அநியாயஞ்செய்யவில்லை. எங்கும் எப்பொழுதும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார் எனக் காண்கிறோம். நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள் இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாய் இருக்கிறார். ஆகையால் ஒருவருக்கும் அநியாயஞ்செய்யாமல் நன்மைசெய்ய நாடுங்கள். "சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும்" என ரோம.2:8-ல் வாசிக்கிறோம். நீங்கள் சத்தியத்தை நேசிக்கும் மக்களாக இருப்பீர்களென்றால், அநியாயத்துக்கு விலகி உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**3. அவர்கள் பொய் பேசுவதுமில்லை.** பொய்யர் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே செல்கிறார்கள். ஆனால் இஸ்ரவேலிலே மீதியானவர்கள் பொய் பேசாதிருந்தார்கள். பொய்பேசுகிறவர்களை தேவன் தண்டியாமல் விடார் எனக் காண்கிறோம். "பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன்; உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்" என்றார் தாவீது (சங்.119:163). அருவருக்கக்கூடிய பொருளைப்போல தாவீது பொய்யை அருவருத்திருக்கிறார். அதேவேளையில் வேதத்தை நேசித்திருக்கிறார். உங்களுடைய அருவருப்பு எது? உங்களுடைய நேசம் எது? தாவீதைப்போல பொய்யை அருவருத்து அதை உங்களை விட்டு விலக்கிப்போடுங்கள். தேவன் கொடுத்த வேதத்தை அநுதினமும் நேசித்து அதை பற்றிக்கொண்டிருங்கள். சிலர் தேவனுக்காகத்தான் இந்த பொய்யைச் சொன்னோம் என்பார்கள். அப்படிப்பட்டவர்கள் கவனிக்கவேண்டும். இதுகுறித்து பவுல் சொல்லும்போது; "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே" என்கிறார் (1கொரி.15:15). தேவனுக்காக நாம் பொய்சொல்லவேண்டிய அவசியமில்லை. தேவன் அதை ஏற்றுக்கொள்ளார். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் அதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் என வேதத்தில் படிக்கிறோம். ஆகையால் மீதியான இஸ்ரவேலரைப்போல நாமும் கொஞ்ச ஜனங்களாக இருந்தாலும் தேவனுக்காக வைராக்கியமுள்ளவர்களாகவும் அவருடைய நாமத்தில்



காலமாயிருக்கிறது. இன்று அவரைத் தேட தாமதிப்பாயானால் இம்மையிலும் மறுமையிலும் அநேக ஆசீர்வாதங்களை இழந்து போவாய். கர்த்தர் வந்து உங்கள் மீது நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது.

அன்பு சகோதரிகளே, தேடுங்கள் அப்பொழுது உங்களுக்குத் தேவையானவைகள் எல்லாம் கூடக் கொடுக்கப்படும். உலகத்தாரைப் போல அல்ல. ராஜ்யத்தின் பிள்ளைகளாய் விசுவாசத்துடன் "...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்..." (மத்.7:7). "என்னைத் (கர்த்தரைத்) தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோ.5:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே கர்த்தருடைய ஆசீர்வாதங்களைக் கண்டடையும்படிக்கும், நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும் கர்த்தரைத் தேடுங்கள், கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள், தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், கர்த்தரைத் தேடக் காலமாயிருக்கிறபடியால் இன்றே தேடுங்கள்.

## தெரிந்துகொள்வோம்

*-K.R.K.Ravi Asir*

- ▶ லண்டனில் முதன் முதலில் 1880 இல்தான் டெலிபோன் டைரக்டரி வெளியிடப்பட்டது. சிறிய பாட்டுப்புத்தக அளவில் 702 பிரதிகளே அச்சிடப்பட்டன.
- ▶ பற்பசை, களிம்பு ஆகியவற்றை ட்யூபில் அடைக்கும் முறையை கண்டு பிடித்தவர் ஜான் கோல்ப் என்பவர். இவர் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
- ▶ உலகில் முதலில் தொகுக்கப்பட்ட முதல் கலைக் களஞ்சியம் ரோம் நாட்டு அறிஞர் ப்ளவுனி 77ம் ஆண்டு தொகுத்த இயற்கை வரலாறு 1600 வரை அது ஒன்று தான் இருந்தது.
- ▶ முதன் முதலில் அரசுப் பணிக்காக தேர்வு நடத்தியது சீனாவில்தான். கி.மு.2ம் நூற்றாண்டில் இத் தேர்வு நடத்தப்பட்டதாம்.
- ▶ ரோஜாப் பூவிலிருந்து முதன் முதலாக பன்னீர் எடுக்கும் முறையை கண்டு பிடித்தவர் தாஜ்மஹால் உருவாக காரணமாக இருந்த நூர்ஜஹானின் தாயார் சாலிமாதான்.

## நடப்புச்செய்திகள்

- ❒ கடலூர் முதுநகரில் 100 கோடி ரூபாய் மதிப்பில் மீன்பிடி துறைமுகம் (ஜெட்டி) கட்டுமான பணி நடந்துவருகிறது.
- ❒ ஆக்ஸிஜன் சிலிண்டருடன் இளம்பெண் தேர்வெழுதிய சம்பவம் உத்திரபிரதேசத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.
- ❒ ஒரு முறை சார்ஜ்செய்தால் 25 நாட்கள் பல்துலக்கலாம் சந்தைக்கு வந்த எலெக்டரிக் பிரஷ்!
- ❒ இந்தியா அமெரிக்கா இடையிலான வர்த்தகம் 40 சதவீதம் அதிகரித்துள்ளது.
- ❒ இத்தாலியில் ரூ3 3/4 கோடிக்கு ஏலம்போன மோனலிசாவின் ஓவியம்.

போல அழிந்து போகின்றவற்றையே தேடிச் செல்லுகின்றனர். காரியம் வாய்க்காமல் திரும்புகின்றனர். அல்லது காரியம் வாய்த்தாலும் அது அதிசீக்கிரத்தில் அழிந்து போகக் கூடிய அநித்தியமானவை என்பதை மறந்து முடிவிலே ஏமாற்றமடைகின்றனர். தாவீது ராஜா பாடும்போது; ‘"அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை" (சங்.34:5) என்று பாடுகிறான். நாமும் கர்த்தருடைய முகத்தை நோக்கிப்பார்த்து பிரகாசமடைவோமாக!

**தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்:**

“தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்” (லூக்.12:31) என வேதம் கூறுகிறது. மத்.6:32-ம் கூட “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை...... தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்” என்கிறது. இங்கு தேவனுடைய ராஜ்யத்தை மட்டும் தேடுங்கள், அதை முதலாவது தேடுங்கள் என்று அறிவுறுத்திக் கூறப்படுவதை சற்று சிந்திக்கவேண்டும். அஞ்ஞானிகளைப் போல உலகக்காரியங்களையே நாடித்தேடுவதை தேவன் விரும்புகிறதில்லை. தம்முடைய பிள்ளைகள் தம்முடைய வார்த்தைகளை விசுவாசித்து தம்முடைய ராஜ்யத்தையே தேடும்படி விரும்புகிறார். அவருடைய விருப்பத்தின்படி செய்யும் போது நமக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் அவர் அருளிச்செய்வார். அன்பு சகோதரியே, இன்னும் உலகம் உலகம் என்று உலகத்தையே நாடி முடிவிலே கவலைப்பட்டு கலங்குவதை நிறுத்துங்கள். தம்முடைய சொந்தகுமாரனையே ஒப்புக்கொடுத்து உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அன்று இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைப்பட்டு அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு அவர்களை நினைத்தருளி அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். அவர்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குக் கொண்டுபோவேன் என்று சொல்லி அழைத்தார். அழைத்தவர் அவர்களை நாற்பது வருடங்களாகப் போஷித்து குறைவின்றி வழிநடத்திச் சென்றார். அதன்பின் தாம் வாக்களித்த வண்ணம் தம்மை விசுவாசித்தவர்களை பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் கொண்டுபோய் சேர்த்தார். ஆம் உங்களை அழைத்தவரும் அவரே! அவர் உங்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பரம கானானாகிய பரலோகத்திற்குக் கொண்டு செல்லும்படி அவருடைய ராஜ்யத்தையே தேடுங்கள் என்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். சபையாகிய இந்த ராஜ்யத்தைத் தேடும்போது நீங்கள் போஷிக்கப்படுவீர்கள். குறைவின்றி நடத்திச்செல்லப்படுவீர்கள். ஏனெனில் கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார் (எபே.5:29). சபையாகிய ராஜ்யத்தைக் குறித்த வைராக்கியம் உங்களுக்குள் இருக்கட்டும். சபையை அலட்சியம் செய்யாதீர்கள். விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் மட்டுமே பரம கானானுக்குள் சேர்க்கப்படுவர்.

**கர்த்தரைத் தேட இதுவே காலம்:**

“......கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப்பண்ணும் மட்டும், அவரைத் தேடக்காலமாயிருக்கிறது” (ஓசி.10:12) என வேதம் கூறுகிறது. கர்த்தர் உங்கள் பிரயாசங்களுக்கேற்ற, பலனை வருஷிக்கப்பண்ணும் வரைக்கும் அவரைத்தேடக்காலமாயிருக்கிறது. ஆம், காலம் சமீபித்து வருகிறபடியால் இதுவே அவரை தேட வேண்டிய சமயமாயிருக்கிறது. அன்பு சகோதரியே, நீ ஒருவேளை கர்த்தராகிய உன் சிருஷ்டிகரைத் தேடாமலிருக்கலாம். தாமதிக்காதே. “.....இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்”. எனவே இன்றே அவரைத் தேட வேண்டிய



நம்பிக்கையுள்ளவர்களாகவும், பொய்யை பகைக்கிறவர்களாகவும் இருந்து கொண்டு சாட்சியுள்ள மக்களாக ஜீவிக்கவேண்டும்.

**4. வஞ்சகநாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை.** ஆம், அவர்கள் ஒருவரையும் வஞ்சிக்கவில்லை. பிசாசு ஏவாளை வஞ்சத்தபடியால் பாவம் உள்ளே பிரவேசித்தது. வஞ்சிக்கிறவர்கள் பிசாசின் மக்களாக இருக்கிறார்கள். இஸ்ரவேலில் மீதியானவர்கள் மற்றவர்களை வஞ்சிக்காதவர்களாயிருந்தார்கள். உலக மக்கள் ஒவ்வொரு நாளும் பலரால் ஏமாற்றப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள் என்று பல செய்திதாள்கள் வாயிலாக அறிகிறோம். வஞ்சிக்கிறவர்கள் பரலோகபாக்கியத்தை சென்றடைய மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் பிசாசுக்காகவும் அவன் தூதனுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற இடத்தில் பங்கடைவார்கள். அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும். வஞ்சகநாவு இல்லாதவர்கள் சுத்தமானவர்களாக இருக்கிறார்கள். "இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்" என்று வெளி.14:5-ல் படிக்கிறோம். நீங்கள் கர்த்தருக்காக வாழும் ஜனங்களாக இருப்பீர்கள் என்றால்; இஸ்ரவேலிலே மீதியான ஜனத்தைப்போல வஞ்சகநாவு இல்லாதவர்களாக இப்பூமியில் வாழவேண்டும். கர்த்தர் ஒருவரையும் அவர் ஏமாற்றுகிறவர் அல்ல. அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார் என வேதம் அவரைக்குறித்து சொல்லுகிறது. நீங்கள் கர்த்தருடையவர்களாயிருப்பீர்களானால் நீங்களும் அவ்விதமாகவே இருக்கவேண்டும். தேவன் அதையே எதிர்பார்க்கிறார். கோணலும் மாறுபாடுமான ஜனத்தின் மத்தியில் நீங்கள் குற்றமற்றவர்களாக ஜீவிக்கவேண்டும். உலக மக்களைப்பார்த்து நீங்கள் ஏமாந்துபோகாதிருங்கள். உலகம் உலகத்தை சிநேகிக்கும். நீங்கள் கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனத்தையும் நம்பி பற்றிக்கொண்டிருங்கள். ஏற்றகாலத்தில் தேவனால் நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்.

**5. அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப்படுத்துக்கொள்வார்கள்.** எப்பொழுது பார்த்தாலும் ஓயாத சண்டைகளும், இழப்பீடுகளும், பொருட்சேதங்களும் இருந்த நாட்கள் கழிந்து மிகவும் அமைதியான சூழ்நிலைக்கு இஸ்ரவேலர் கொண்டு செல்லப்பட்டார்கள். சமாதானக் கர்த்தருக்கு நேராக வழிநடத்தப்பட்டார்கள். "கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்" என்று சொல்லிய ஏசாயா தீர்க்கனுடைய வாய்மொழியின்படியே அவர்களுக்கு இருந்த சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போனது (ஏசா.35:10). நாம் கவனிக்க வேண்டிய ஒரு பகுதியிருக்கிறது. அது என்னவென்றால்; கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் என்ற ஒரு வார்த்தையை பார்க்கிறோம். ஆம், அன்பானவர்களே, இஸ்ரவேலிலே மீதியானவர்கள் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள். அவர்கள் வேறெங்கும் செல்லாமல் திரும்பி ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு போனார்கள். எல்லாவற்றையும் இழந்து, உடைமைகளை இழந்து, உறவை இழந்து, பசியோடும் பட்டினியோடும் அண்டை நாடுகளுக்கு தஞ்சம் புகக்கூடியவர்களுக்கு இப்படிப்பட்ட ஆனந்த களிப்பு உண்டாகுமா? எங்கள் தேவன் எங்கே? எங்களை கைவிட்டார். இதோ நாங்கள் அகதிகளாக மற்றநாடுகளுக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளோம் என்று ஓலமிடுவார்கள். ஆனால்

இஸ்ரவேலிலோ மீதியானவர்கள் என்ன வந்தாலும் கர்த்தருடைய நாமத்தில் நம்பிக்கையாக இருந்தவர்கள். ஆகையால் எங்கள் தேவன் எங்களோடே இருக்கிறார். இம்மட்டும் எங்களை காத்த தேவன் இனிமேலும் காக்க வல்லவராயிருக்கிறார் என்று சொல்லி; அவர்கள் மீண்டும் சீயோனுக்கு சென்றார்கள். பழையதை மறக்கவில்லை. சிலருக்கு இழப்பீடு வந்தவுடன் பழைய நிலையை மறந்துவிடுவார்கள். இவர்களோ சீயோனுக்கு சென்று நித்திய மகிழ்ச்சியை பெற்றுக்கொண்டார்கள். தேவன் அவர்களுக்கு சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தார். பயப்படுத்துவாரில்லாமல் சந்தோஷமாயிருந்தார்கள்.

ஆண்டவர் இயேசு சொல்வதை கவனியுங்கள்; "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்றார் (மத்.10:28). இந்த நம்பிக்கை எப்படிப்பட்டவர்கள் மத்தியில் இருக்கும்? கர்த்தருக்காக காத்திருக்கும் மீதியான ஜனங்கள் மத்தியில் இருக்கும். மனிதனால் சரீரத்தை மாத்திரமே கொல்ல முடியும். ஆனால் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவர் தேவன் ஒருவரே, அவருக்கே பயப்படுங்கள் என்கிறார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, இஸ்ரவேலில் மீதியானவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தார்கள், அவர்கள் அநியாயஞ்செய்யவில்லை, பொய்பேசவில்லை, வஞ்சக நாவு அவர்களுடைய வாயில் கண்டுபிடிக்கப்படவில்லை, மேலும் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொண்டார்கள். அவர்களை அழைத்த தேவன் அவர்களோடு இருந்து அவர்களை காத்தார். நீங்கள் ஒருவேளை இந்த மீதியான ஜனங்களைப்போல இருக்கலாம். கவலைப்படாதிருங்கள், அவர்களுக்கு இருந்த நம்பிக்கை உங்களிடமும் இருக்கட்டும். இயேசுவின் இரண்டாம் வருகையில் அவரோடு எடுத்துக்கொள்ளப்பட்டு நித்தியமானவரை நித்திய நித்தியமாக தரிசித்து அவரோடு என்றென்றும் இருக்கும் பாக்கியத்தை பெறுவீர்கள்.

**கேள்வி நேரம்**

**மீதியான இஸ்ரவேலுக்கு கர்த்தருடைய வாக்குதத்தம் என்ன?**

"உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்" என்றார் (எரே.15:11). வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் அந்தப்படியாக இஸ்ரவேலுக்கு சகாயஞ்செய்தார். அதைப்போல உங்களுக்கும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம் நித்திய ஜீவனை கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். யாருக்கு? முடிவு பரியந்தமும் நிலைத்திருப்பவர்களுக்கு, ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு, இந்த வாக்குத்தத்தத்தை செய்திருக்கிறார். இஸ்ரவேலிலே மீதியானவர்கள். மிகவும் பொறுமையுடனிருந்து சீயோனுக்கு வந்தார்கள். சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போனது. மேலும் நெருக்கத்தின் காலத்தில் அவர்களுக்காக சத்துருவுக்கு எதிர்ப்பட்டு அவர்களுக்காக யுத்தம் செய்தார். ஆம், அன்பானவர்களே, உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் வாக்கு மாறாதவராயிருக்கிறார். ஆகையால் சோர்ந்துபோகாமல் அவருக்காக காத்திருங்கள். மீதியான இஸ்ரவேலரோடு இருந்த கர்த்தர் உங்களோடும் இருப்பார். அவர்களைப்போல ஐந்து காரியங்களிலும் நிலைத்திருங்கள். உங்களுக்காக ஜெபம்பண்ணுகிறோம்.



பெண்கள் பகுதி

# தேடுங்கள் – Seek

*-Glory Arjunan*



**இ**ன்றைய நாட்களில் ஜனங்கள் எதை எதையோ நாடித் தேடுகிறார்கள். சிலர் நல்ல உத்தியோகத்தை தேடுகிறார்கள், சிலர் பட்டங்கள், பதவிகளை நாடுகின்றனர். சிலர் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல வரன்களைத் தேடுகின்றனர். சிலர் ஓயாது காலை முதல் மாலை வரை உணவுக்காகவும், உடைக்காகவும் அலைந்து திரின்றனர். சிலர் உலக சம்பத்தைத் தேடுகிறார்கள். சிலர் சமுதாயத்தில் ஒரு பெரிய ஆளாக மாறவேண்டுமென உலக மேன்மையை நாடுகின்றனர். இப்படி அழிந்து போகின்றவைகளையே தேடிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து வேதம் உலகத்தார் என்றும், அஞ்ஞானிகள் என்றும் இழித்துரைக்கிறது.

அன்பு சகோதரிகளே, "...இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" (மத்.6:32). "ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத்.6:34). அநேகர் இரட்சிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும் இன்னும் உலத்தாரைப் போலவும், அஞ்ஞானிகளைப் போலவும் இப்படிப்பட்டவைகளையே நாடித்தேடுகிறார்கள். தேவன் "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப தெப்படி?" (ரோம.8:32).


**கர்த்தரைத் தேடுங்கள்:**

"உன் தேவனாகிய கர்த்தரைத் தேட..." (உபா.4:29) என வேதம் கூறுகிறது. உங்களை உண்டாக்கி அனுதினமும் உங்களைக் காத்துவருகிற கர்த்தரைத் தேடுங்கள். முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கர்த்தரைத் தேடுங்கள். அவரே உங்கள் இரட்சகர், அவரே உங்களை சிருஷ்டித்தவர், அவரே உங்களைக் காண்கிறவர், அவரே உங்களை சகல தீமையினின்றும் விடுவிக்கிறவர். அவரே உண்மையுள்ளவர், அவரே உயிருள்ளவர், அவரே நித்திய பிதா. ஆகவே அவரையே தேடுங்கள். வீணானவைகளை நாடித்தேடி ஏமாந்து போகாதீர்கள். மேலும் "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்;" (ஏசா.55:6). அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதி.8:17) என வேதம் கூறுகிறது. ஆம், நம்முடைய அனுதின பாடுகளில் தேவன் நம்மோடிருக்கும்படிக்கும், நம்முடைய காரியங்கள் யாவும் கைகூடி வரும்படிக்கும் நாம் சோதனைக்குட்படாதபடிக்கும் அதிகாலையிலே கர்த்தரைத் தேடுவோம். தேவ ஆசீர் பெறுவோம்.

**கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள்:**

கர்த்தர் நமக்கு ஷேமத்தைக் கொடுக்கும்படிக்கு அவருடைய முகத்தைத் தேடுங்கள் என்று 2நாளா.7:14 கூறுகிறது. நாம் ஷேமத்துடனிருப்பது தேவசித்தம். ஆனால் அநேகர் ஷேமம் அடையும்படி அவருடைய முகத்தைத் தேட மறந்து விடுகின்றனர். மனுஷருடைய தயவையே நாடி ஓடுகின்றனர். ஜெபிக்க நேரமில்லையென்று கூறி கர்த்தருடைய முகத்தைத் தேடாமல் இரவெல்லாம் தங்களுடைய விருப்பத்தையே நிறைவேற்றும்படி திட்டமிட்டு அதிகாலையில் அதே நினைப்போடு எழுந்து உலகத்தாரைப்

| | |
|---|---|
| 41. S.V. தனபால் | - ஈரோடு |
| 42. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 43. D. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 44. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 45. Mrs. சாந்தாபழனி | - தர்மபுரி |
| 46. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 47. Mrs. இளவரசி ஜோபிதா | - கோவை |
| 48. M. முருகன் | - நாமக்கல் |




| | |
|---|---|
| 41. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 42. G. பூங்கோதை | - கோபி |
| 43. S. ரெஜினாசெல்வராஜ் | - திருச்சி |
| 44. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 45. D. தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 46. S.R. பெரியசாமி | - நாமக்கல் |
| 47. S.A. சாமுவேல் | - நாமக்கல் |
| 48. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 49. Mrs. ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 50. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 51. Mrs. ஞானதீபம் ஜெபராஜ் | - திருநெல்வேலி |
| 52. J.S. ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 53. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 54. P. ஸ்டெல்லாமேரி | - திருப்பூர் |
| 55. J. ஆஷா கதிர் | - தூத்துக்குடி |
| 56. A. குருஸ்ஆரோக்கியம் | - அ.பாளையம் |
| 57. R. ஆனந்த் | - அரியலூர் |
| 58. Mrs. ஜெபாமேசஸ் | - விளாத்திகுளம் |
| 59. J. ஜான்சி | - ஆனைமலை |

**வீண் சிந்தனைகளை நான் வெறுத்து,**
**உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்**
**சங்கீதம் 119:113**



## பொது அறிவு சோதனை

1. கூடங்குளம் அணுமின் சக்தி நிலையம் அமைந்துள்ள மாவட்டம் எது?
அ) திருநெல்வேலி ஆ) கன்னியாகுமரி இ) தூத்துக்குடி
2. சூரிய குடும்பத்தில் காணப்படும் மிகப்பெரிய கோள் எது?
அ) வெள்ளி ஆ) சனி இ) வியாழன்
3. மேற்கு இரயில்வேயின் தலைமையகம் எது?
அ) பூனே ஆ) மும்பை இ) செகந்திராபாத்
4. தமிழ்நாடு எந்த பருவ காலத்தில் மழை பெறுகிறது?
அ) கோடைக்காலம் ஆ) தென்மேற்கு பருவமழை இ) வடகிழக்கு பருவமலை
5. நீண்ட பாலைவனம் எது?
அ) தார் ஆ) சஹாரா இ) ஆல்ப்ஸ்

விடை
1. அ 2. இ 3. அ 4. இ 5. அ

## ஜெபியுங்கள்

- நமது மாத இதழின் எழுத்தாளர் சகோதரி பெட்டி அவர்களுடைய சுகத்திற்காக...
- தேவன் நம்மை தமது அளவற்ற கிருபையினாலே வழிநடத்திக் கொண்டு வருகிறார் அதற்காக நன்றி சொல்லி...
- இந்திய தேசத்தில் நடைபெற்று வரும் கர்த்தருடைய ஊழியம் தொடர்ந்து தடையில்லாமல் நடைபெற...






# பழைய பாவ மனிதன் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

### பாடம் -8 ஆண்புணர்ச்சி - **Homosexuality**

*-J.C.Choate*



**நா**ம் பழைய மனிதனின் பாவத்தைக் களைந்து விட்டு இயேசுகிறிஸ்துவுக்குள்ளான நீதிமானாகிய புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ள வேண்டும் பொருட்டு நம்முடைய தொடர் பாடத்தினைத் தொடர்ந்து படிப்போம்.

இம்முறை ஆண்புணர்ச்சியைப் பற்றிய உறவில் வேதாகமம் இது குறித்து என்ன கூறுகிறது என்பதைக் கற்கப்போகிறோம்.

நம்முடைய நவீன உலகில் அநேக தீமைகள் காணப்படுகிறது. அநேக தீமைகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது அல்லது சகித்துக் கொள்ளப்படுகிறது. அநேகர் ஏதோ சிலவற்றில் பெருமையுடையவர்களாக இருப்பது போலவும் புகழ்ச்சியுடன் இருப்பதுபோலவும் நினைத்து பொது ஜனங்களுக்கு முன்பாக பகட்டாகக் காணப்படுகின்றனர், இது ஆண்புணர்ச்சி பழக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆண்புணர்ச்சி என்பது புதிதல்ல, ஆனால் கடந்த நாட்களில் இது புலப்படாததாகக் காணப்பட்டிருந்தது. மேலும் ஆண்புணர்ச்சிகள் முடிவுகட்டப்படும்படிக்கு தங்களால் அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. ஆனால் கடந்த சில வருடங்களாக இவைகளெல்லாம் மாறும்படிக்கு ஏதோ சில நடைபெற்றிருக்கிறது. ஆண்புணர்ச்சி தங்களால் அடையாளம் கண்டுபிடிக்கப்படாதது மட்டுமல்ல ஆனால் இவைகளின் தேவைகளை உருவாக்கும்படி உலகின் பல்வேறு பகுதிகளில் இவைகள் ஒன்றோடொன்று கட்டப்பட்டதாயிருக்கிறது. அவர்கள் தாங்கள் அநீதியாக நடத்தப்படுவதைப் போலவும் குற்றஞ்சாட்டப்படுவது போலவும் தாங்களாகவே விவரிக்கின்றனர். அவர்கள் ஆண்புணர்ச்சியில் ஈடுபடுவதில் தவறு ஒன்றுமில்லை ஏனென்றால் இது சாதாரணமான இன்னொரு வாழ்க்கை முறை எனப் போதிக்கின்றனர். மேலும் அவர்கள் இதை எதிர்க்கும் அனைவரையும் குற்றவாளியாகவும் சிறுபான்மை குழுவினரின் உரிமையை மறுப்பதாகவும் நினைக்கச் செய்யும்படியாக முயற்சிக்கின்றனர்.

தேவன் ஆதியிலே மனிதனை உருவாக்கும்போது அவன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்டதை நாம் கண்டிப்பாக புரிந்துகொள்ளவேண்டும் (ஆதி.2:18). ஆகவே அவர் என்ன செய்தார்? அவர் இன்னொரு மனிதனை உண்டாக்கினாரா? இல்லை, ஆனால், "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவனை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம்; இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில்

மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி.2:21-14) என்று நாம் வாசிக்கிறோம். எனவே தேவன் ஒரு மனுஷியை உண்டாக்கினார், அவர் அவ்வாறு உண்டாக்கவில்லையா? மேலும் இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் (ஆணையும் பெண்ணையும்) விட்டு தன் மனைவியோடே (பெண்) இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த உறவு ஆண்புணர்ச்சி தத்துவமேயில்லை. தேவன் ஒரு மனிதனை உருவாக்கியிருப்பாரென்றால் அதன் பின் அவனுக்குத் துணையாக இன்னொரு மனிதனை உண்டாக்கியிருப்பார், அதன்பின் மனித வர்க்கமே முடிவடைந்திருக்கும். ஆனால் தேவன் அதை அவ்வாறு செய்யவில்லை. அதற்குப்பதிலாக, தேவன் ஒரு மனுஷியை மனுஷனுக்காக உண்டாக்கி அத்தோடு அவர்கள் பலுகிபெருகி பூமியை நிரப்பும்படிக்கு உண்டாக்கினார் (ஆதி.1:26,27). அவ்வாறே அவர்கள் செய்தார்கள், அவர்கள் மூலம் இவ்வுலகில் நீங்களும் நானும் வந்தோம்.

நிச்சயமாக நீங்கள் ஆண்புணர்ச்சி என்றால் என்ன என்பதை அறிவீர்களென நினைக்கின்றேன், மேலும் அதை நீங்கள் செய்வீர்களெனவும் நிச்சயிக்கிறேன், ஆனால் தங்களுடைய பாலுணர்வு சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக ஆண்கள் ஆண்களிடம் ஈர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் பெண்கள் பெண்களிடம் ஈர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மற்ற வார்த்தைகளில் விவரிப்போமென்றால், தேவன் இவர்களில் ஒருவர் இல்லையென்றால் முழுமைபெற்றிராதென்று ஆணையும் பெண்ணெயும் சிருஷ்டித்தார். மேலும் ஆனபடியினால் அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் கவரப்படத்தக்க தன்மையுள்ளவர்களாகவும் இருக்கும் பொருட்டு உண்டாக்கப்பட்டனர். மேலும் அவர் சட்டப்படியான வழியில் மனுஷன் மனுஷியுடன் இணைந்திருந்து பலுகி பெருகும்படி திருமணத்தை ஏற்படுத்தினார். காலங்காலமாக தேவனுடைய வழி மரியாதைக்குரியதாகவும் பின்பற்றக்கூடியதாகவும் இருந்தது மேலும் விரும்பத்தக்க விளைவை ஏற்படுத்துகிறது. இந்த வகையில் இது மனுஷனுக்கும் மனுஷிக்கும் இணக்கத்தையும் சகோதர இணக்கத்தில் நிலைத்திருப்பதின் இன்பத்தையும் கொடுக்கிறது. அத்துடன் குழந்தைகளைப் பெற்றிருப்பதினால் மனித வர்க்கம் தொடர்கிறது. ஆனால் தேவனுடைய வழி கைவிடப்பட்டிருக்கும்போது ஆண் ஆணிடமும் பெண் பெண்ணிடமும் ஈர்க்கப்படுகின்றனர். அதன்பிறகு இது இயற்கையானதாக இருப்பதில்லை. இயற்கைச் சட்டத்திற்கும், திருமணபந்தத் திற்கும், குடும்ப உறவிற்கும் எதிராக இருக்கிற இந்த ஆண்புணர்ச்சிக்கு ஆதரவாக யாரேனும் எப்படி வாக்குவாதம் செய்யமுடியும். இந்தப் பழக்கம் எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்படுமானால் அதன் பிறகு இந்த உலகத்தை விட்டே மனிதன் வெகு சீக்கிரத்தில் தள்ளப்பட்டுவிடுவான் என்பதுதான் இதன் பொருள். ஆனால் இம்மாதிரியான ஒரு சில பழக்கமிருந்தாலும் கூட, இதன்பொருள் தேவனும் அவருடைய வழியும் அதனுடைய பரவலுக்கு புறக்கணிக்கப்படுகிறது.



## வேத அறிவுப்போட்டி 232–ன் விடைகள்

| | |
|---|---|
| 1. எலியா | - யாக்.5:17 |
| 2. யோவாஸ் | - 2நாளா.24:1 |
| 3. எட்டுப்பேர் | - 1பேது.3:20 |
| 4. எஸ்றா | - எஸ்றா 10:10 |
| 5. கேடுள்ளதாயிருக்கும் | - 2பேது.2:20 |
| 6. நெகேமியா | - நெகே.5:11 |
| 7. ஆம் | - 1யோவா.5:17 |
| 8. எஸ்தர் | - எஸ்தர் 7:14 |
| 9. யோவான் | - வெளி.22:8 |
| 10. எலிகூ | - யோபு 34:30 |

## வேத அறிவுப்போட்டி 233–ன் விடைகள்

| | |
|---|---|
| 1. பாக்கியவான்கள் | - மத்.5:3 |
| 2. நன்மையை | - சங்.84:11 |
| 3. தீட்டுப்படுத்தாது | - மாற்கு 7:18 |
| 4. ஞானம் | - நீதி.14:33 |
| 5. ஆம் | - லூக்.17:10 |
| 6. இல்லை | - பிர.7:20 |
| 7. இயேசு | - யோவா.5:34 |
| 8. எசேக்கியா | - ஏசா.38:5 |
| 9. நாற்பது | - அப்.1:3 |
| 10. கர்த்தர் | - ஏரே.17:10 |

## வேத அறிவுப்போட்டி எண் 232ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Mrs. அன்புகமலம் | - காரைக்குடி |
| 2. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 3. R. அந்தோனியாம்மாள் | - கலுங்குவிளை |
| 4. B. ஞானதீபம் ஜெபராஜ் | - இடையான்குடி |
| 5. E. அதிசயம் | - பனைகுடி |
| 6. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 7. K. ராணிமூர்த்தி | - திருநெல்வேலி |
| 8. Mrs. ஜேன்தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 9. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 10. Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 11. S.செல்வராஜ் சாலமோன் | - வள்ளியூர் |
| 12. Mrs. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 13. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 14. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 15. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 16. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 17. Mrs. பாலின் மார்ட்டின் | - காரைக்குடி |
| 18. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 19. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 20. Mrs. ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 21. S. ஜாய் | - நெல்லூர் |
| 22. Mrs. ரத்தினாபாய்பிரசாத் | - மதுரை |
| 23. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 24. Mrs. ராஜம்மாள் | - சென்னை |
| 25. Mrs. தேவதாதேவபிரியம் | - சென்னை |
| 26. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 27. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 28. S. பிரமிளாரேவதி | - கோவை |
| 29. J. ஆலிவ் | - கோவை |
| 30. A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 31. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 32. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 33. Mrs. ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 34. J. ஜான்சிராணி | - ஆனைமலை |
| 35. K.S. மாணிக்கம் | - திருச்சி |
| 36. G. பூங்கோதை | - கோபி |
| 37. T. இராஜாத்தி | - கோம்பை |
| 38. J. விக்டர்சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி |
| 39. Mrs. தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 40. R. பாரதி | - கோபி |

## வேத அறிவுப்போட்டி எண் 233ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 2. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 3. Mrs. ஆலிவ் ஜெயபாலன் | - கோவை |
| 4. Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 5. Mrs. ஜேன்தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 6. S.செல்வராஜ் சாலமோன் | - வள்ளியூர் |
| 7. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 8. K. ரத்னாபாய்பிரசாத் | - மதுரை |
| 9. Mrs. ஜாய்மேத்யூ | - விகே புரம் |
| 10. K. ராணி | - திருநெல்வேலி |
| 11. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 12. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 13. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 14. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 15. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 16. Mrs. கெத்சிசெல்வின் | - சென்னை |
| 17. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 18. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 19. R. அந்தோனியம்மாள் | - கலுங்குவிளை |
| 20. Mrs. பியூலாஜேசுராஜன் | - பாண்டி |
| 21. J. இளவரசி ஜோபிதா | - கோவை |
| 22. Mrs. ரூபிஜெயசேகர் | - கலுங்குவிளை |
| 23. Mrs. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 24. J. விக்டர்சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி |
| 25. Mrs. பிரிசில்லா வின்செண்ட் | - தூத்துக்குடி |
| 26. Mrs. பாலின்டேனியல் | - சென்னை |
| 27. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 28. M. முருகன் | - நாமக்கல் |
| 29. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 30. Mrs. ஜாய்ஹெலன் புனிதா | - சென்னை |
| 31. Mrs. ராஜம்மாள் மனோகரன் | - சென்னை |
| 32. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 33. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 34. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 35. Mrs. எபிநேசர் எட்வேர்டு | - கடலூர் |
| 36. Mrs. தேவதாதேவபிரியம் | - சென்னை |
| 37. Sis. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 38. Mrs. சாந்தாபழனி | - தருமபுரி |
| 39. T. ஏஞ்சலின்நேசமலர் | - கன்னியாகுமரி |
| 40. S. தங்கம் | - கன்னியாகுமரி |

நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய். "நீதியான நியாயத்தீர்ப்பு, வேத வாக்கியத்தை சார்ந்தது, இது தவறான சகோதரனுக்காக அல்லது ஏதோ ஒரு பாவிக்கு மட்டுமே. ஆனால் மாய்மாலக்காரன் ஒருவனுக்கு உதவிசெய்யும் நிலையில் இல்லை, எனவே இந்த பகுதியானது ஒரு தவறான வழியில் செல்பவனுக்கு உதவி செய்ய முயற்சிப்பதற்கு முன்பாக நாம் நம்முடைய வாழ்வினை தேவனுக்கு நேராக கொண்டு செல்ல வேண்டும்.

- **பிறப்பாலேயே எல்லா குழந்தைகளும் பாவிகள் என்று பலர் போதிக்கின்றனர்.** சங்கீதம் 51;5 ஐ தவறாக புரிந்து கொண்டு இதன் அடிப்படையில் இந்த கோட்பாட்டினைப் போதிக்கின்றனர். "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" வசனத்தை கவனமின்றி வாசித்ததினால் இது பாவமும் பிறப்பு தவறான நம்பிக்கையின் விளைவு என குறிப்பிடப்படுகிறது. "நான் பாவத்தோடு பிறந்தேன்" என்று தாவீது கூறினானா? "நான் கர்ப்பத்திலே ஒரு பாவி" என்று அவன் கூறினானா? இல்லை, அவன் அவனுடைய தாய் (பெற்றோர்) ஒரு பாவி என்று கூறினான், மேலும் அவன் பாவம் நிறைந்த ஒரு உலகத்திற்குள் பிறந்தான் என்று கூறினான். நிச்சயமாக, இவைகளெல்லாம் உண்மையான கூற்றுகள். பொறுப்புடைய வயதை எட்டின எல்லாருமே பாவிகள், மேலும் உலகம் ஒரு பாவம் நிறைந்த இடம், ஆனால் இந்த வசனம் ஒரு குழந்தை தன்னுடைய பெற்றோரின் பாவங்களில் பிறக்கிறது அல்லது உலகத்தின் பாவங்களில் பிறக்கிறது (எசேக்.18:19,20) என்று கூறவில்லை.

- **அநேக பிரிவினை சபை மக்கள் கிறிஸ்துமீண்டும் இந்த பூமிக்கு வந்து ஆயிரம் வருஷம் ஆட்சி செய்வார் என்று நம்புகின்றனர்.** அவர்கள் இந்த போதனையை சார்ந்து தேவதூதனால் சொல்லப்படுகிற வெளிப்படுத்தின விசேஷம் 20:2 ஐ "...பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டி வைத்து," என தங்களுடைய கருத்தினை விவரிக்கின்றனர். ஆனால், மேலும் இந்த பகுதியை வாசிக்கையில், இது அந்த சமயத்தில் "இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும்... அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்" இந்தக் காட்சி பரலோகத்திற்குரியதே, பூமியின் மேல் அல்ல, இப்போது கிறிஸ்து இராஜாதி இராஜாவாகவும் மேலும் கர்த்தாதி கர்த்தராகவும் ஆட்சி செய்கிறார் (வெளி.20:4-6)

நாம் தேவனுடைய வார்த்தையை மிகக்கவனமாகக் கைக்கொண்டு, சத்தியத்தியத்தை அறியும்படிக்கு ஜெபம் செய்வோமாக.



ஆண்புணர்ச்சி பழக்கத்தில் ஈடுபட ஆண்கள் மற்றும் பெண்கள் விரும்பினால் பிறகு அது தொடர்ந்து செய்யப்பட வேண்டுமென அனுமதிக்கிற இவர்கள் வாக்குவாதம் செய்கிறவர்களாக இருக்கிறார்கள். உண்மையில் மக்கள் எதை விரும்புகிறார்களோ அது அவர்களுடைய சுய அழிவுக்கானாலும் கூட அதை செய்ய தேவன் அனுமதிக்கிறார், ஆனால் அதே சமயம், தேவன் இந்த காரியத்தைக் குறித்து தம்முடைய வார்த்தையில் கூறும்படிக்கு உறுதியான சில காரியங்களை குறிப்பிட்டிருக்கிறார் மேலும் அவரை விசுவாசித்து அவருடைய சித்தத்தை போதிக்கிற நமக்கு இப்படிப்பட்ட தீமையான பழக்கத்தைச் சுட்டிக்காட்டி அதைக் கட்டுப்படுத்த வேண்டியது நமது வேலையாக இருக்கிறது.

ஆதியாகமம் 18 மற்றும் 19-ல் இந்த ஆண்புணர்ச்சி பழக்கத்தினால் ஏற்படும் அழிவுக்கான எடுத்துக்காட்டுகளில் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக பின்வருவன இதனுடைய சூழ்நிலை: ஆபிரகாமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று எனவே ஆபிரகாமும் லோத்தும் மேலும் பிரச்சனை வராதபடிக்கு பிரிந்து வெவ்வேறு இடத்துக்குப் போக ஆலோசித்தனர். ஆனபடியினால் ஆபிரகாம் லோத் விரும்பிய இடத்தைத் தெரிவுசெய்ய அனுமதித்தான், வேதவாக்கியம் லோத்து சோதோமை நோக்கி கூடாரம் போட்டான் என்று சொல்லுகிறது. இது தவறானதாயிருந்தது, ஏனென்றால் லோத்தும் அவனுடைய குடும்பமும் கடைசியில் சோதோமில் அழிந்தது. ஆனால் அந்த சமயத்தில் சோதோம் மற்றும் கொமோரா பட்டணத்து ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்ததைக் கண்டு அவைகளை அழிக்கத்திட்டமிட்டார். லோத்தும் அவனுடைய குடும்பமும் சோதோமில் இருக்கிறார்கள் என்று ஆபிரகாம் அறிந்து தெரிந்து கொண்டபோது, அந்த பட்டணங்களை மன்னித்து விடும்படி தேவனிடத்தில் வேண்டிக்கொண்டான். அவன் கர்த்தரிடத்தில் பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருந்தால் அவர்களை தண்டிப்பீரோ என்று கேட்டான். கர்த்தர் தண்டிக்க மாட்டேன் என்று ஒத்துக்கொண்டார். பிறகு அப்படியே எண்ணிக்கையைக் குறைத்து பத்து நீதிமான்கள் வரைக்கும் வந்து, பத்து நீதிமான்கள் இருந்தால் தண்டிப்பீரோ என்றான் மறுபடியும் கர்த்தர் அங்கே பத்து நீதிமான்களைக் கண்டால் அவர் அந்த பட்டணங்களை மன்னிப்பதாகச் சொன்னார், ஆனால் அந்தப்படிகூட அங்கே காணப்படவில்லை. இப்போது ஆதியாகமம் 19:1முதல் உள்ள சம்பவத்தை பின்தொடருவோம் "...பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய்விட்டார்கள்... அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோராவின்மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்தப்பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப்பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்" (ஆதி.19:1-16,24,25).

இப்போது இந்த சம்வத்திலிருந்து எதை அறிந்து கொள்கிறோம்? சோதோமின் மனுஷர் ஆண்புணர்ச்சிக்காரர்களாயிருந்தார்கள் எனத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. லோத் தன்னுடைய வீட்டிற்குள் பிரவேசித்திருந்த தேவதூதர்

களைக் காக்கும்படிக்கு அந்த சோதோம் பட்டணத்து மனிதர்களிடம் சகோதரரே, இந்த அக்கிரம் செய்யவேண்டாம். இதோ புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்கு உண்டு; அவர்களை உங்களிடத்திற்கு வெளியே கொண்டு வருகிறேன். அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள் என்று சொல்லியும் கூட அவர்கள் அந்த மனிதர்கள் தான் தேவை என்பதால் லோத்தின் குமாரத்திகளை மறுத்துவிட்டார்கள். எனவே அவர்கள் அக்கிரமக்காரர்களாயிருந்தபடியினால் அங்கே பத்து நீதிமான்கள் கூட காணப்படவில்லை, பின்பு கர்த்தர் அந்த பட்டணங்களை பூமியிலிருந்து அழித்துப்போட்டார். வேறு வார்த்தைகளில் சொன்னால் அவர்கள் திரும்பவும் நல்லநிலைக்கு மாற்றக்கூட இயலாத நிலையில் அல்லது அவர்களை மாற்றமுடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்கள் மிகவும் அக்கிரமக்காரர்களாயிருந்தார்கள். இப்படிப்பட்ட வாழ்க்கை முறையைக் குறித்து தேவன் என்ன நினைப்பார் என நாம் காணமுடிகிறது.

இருந்தபோதிலும் தேவன் பூமியிலிருந்து ஆண்புணர்ச்சி பழக்கத்தை அன்றுபோல் இன்று அழிக்கவில்லை, இது அவர்கள் தொடர்ந்து அந்தப் பழக்கத்தில் ஈடுபடமாட்டார்கள் என்று அர்த்தமல்ல. இருந்தாலும் கூட அவர்களுடைய சொந்த ஒழுக்கங்கெட்ட பழக்கங்கள், அவர்கள் எய்ட்ஸ் என்ற வியாதியோடு தொடர்பு கொண்டிருக்கிறவர்கள். அவர்கள் அந்த நோயை அவர்களுக்குள்ளே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அத்தோடு அந்நோய் அவர்களை வெளியே துடைத்து போடும்படிக்கு பயமுறுத்துகிறது. ஆனால் இதற்கும் மேலாக, தேவன் நியாயத்தீர்ப்பில் அவர்களிடம் நியாயம் விசாரிப்பார், மேலும் அவர்கள் சமயமும் வாய்ப்பும் கிடைக்கும் போது மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியாத பட்சத்தில் தேவன் அவர்களை நித்திய அழிவுக்கு ஒப்படைப்பார்.

பவுல் தன்னுடைய நாட்களில் அக்கிரமம் நிறைந்த ஜனக்கூட்டத்தைப் பற்றி விவரிக்கிறதை நாம் காண்கிறோம். அவர், "இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமாக அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள்ளே அடைந்தார்கள்" (ரோம.1:26,27). தொடர்ந்து அவர்களுடைய எல்லாவிதமான ஒழுக்கங்கெட்ட செயல்களைக் குறிப்பிடும்படிக்கு, அவர்கள் பாவங்களில் ஒன்று அவர்கள் சுபாவ அன்பில்லாதவர்களாயிருந்தார்கள் என்றார் (ரோம.1:31). அவர் "இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்" என ரோம.1;32-ல் சொல்லி முடிக்கிறார். இப்போது அவர் இங்கே ஆண்புணர்ச்சியைப் பற்றி கூறவில்லையென்றால், பிறகு எதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்? பின்பு இவர்களுடைய இப்படிப்பட்ட வாழ்க்கை



ஆனால் வசனம் 10 நாம் நற்கிரியைகளைச் செய்வதற்கென்று சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்: "...நற்கிரியைகளுக்காக..." ஆனபடியினால், நம்முடைய சொந்த நற்கிரியைகள், கிறிஸ்துவுக்குள் நம்முடைய இரட்சிப்பிற்கான மிக உறுதியான திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- **"நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்..."** கலாத்தியர் 3:26-ல் அழகாக விவரிக்கப்பட்டுள்ளது. "...நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" எனவே நாமெல்லாரும் "விசுவாசத்தினாலே மாத்திரம்" இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று போதிப்பதற்கு இது ஒரு "நிரூபனபாடப்பகுதி" ஆக மாறியிருக்கிறது.

ஆனால் 27-ம் வசனம் இந்த பிழையான முடிவுரையை தெளிவான குறிப்பினால் தடைசெய்கிறது, "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத்தரித்துக் கொண்டீர்களே".

- **முதல் நூற்றாண்டில் கூட "விசுவாசத்தினாலே மாத்திரம்" இரட்சிப்புவருகிறது என்று போதிக்க முயற்சித்தவர்கள் இருந்தனர்,** இது யாக்கோபு 2:14-26-ல் விளக்கப்பட்டது போலிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் இந்த பகுதிமட்டுமே "விசுவாசத்தினாலே மாத்திரம்" என்று பேசுகிறது மேலும் இந்த பாடப்பகுதி, "ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக்கோபு 2:24) என்று பேசுகிறது.

- **1 யோவான் 5:1-ல் கூட நாம் இயேசுவில் விசுவாசம் கொண்டால், நாம் "தேவனால் பிறந்தவர்கள்" என்று போதிக்கப் பயன்படுத்தப்படுகிறது - இரட்சிக்கப்பட்டோம்:** "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்..."

ஆனால் வசனம் 3 தொடர்ந்து உண்மையாகவே நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவரால் பிறந்திருப்போமானால், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வோம் என்று விவரிக்கிறது. "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து **அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது,** தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்பு கூருகிறோமென்று அறிந்து கொள்கிறோம்"

- **நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்க தடைசெய்யப்பட்டவர்களாயிருக்கிறோம்** என்று சொல்லுகிறவர்கள் உண்டு அவர்கள் தங்களுடைய முடிவுரையில் அடித்தளம் இடுகின்றனர் - மேலும் அவர்களுடைய பாதுகாப்பு எந்த நியாயத்தீர்ப்பிலிருந்தும் விலகியிருக்க வேண்டும் - மத்தேயு 7:1 "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்".

எப்படியாயினும், இது உண்மையாகவே நியாயத்தீர்ப்பின் ஆக்கினையல்ல ஆனால் மாய்மாலம்! வசனம் 4 மற்றும் 5 விளக்குகிறது: "...உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி:

வஞ்சிக்கப்படுவதிலிருந்து காக்கப்பட்டிருக்கிறோம். நாம் இந்த விளக்கங்களை மட்டும் அறிந்திருக்கவில்லை ஆனால் இன்று மனிதவர்க்கத்திற்காக கர்த்தருடைய முழுமையான சித்தத்தையும் கூட அறிந்திருக்கிறோம்.

☐ **இரண்டாவது, நாம் ஆலோசிக்கத்தக்க காரியத்தின் ஒப்பற்ற ஒழுங்கில் தேவனுடைய ஞானத்தைக் காண்கிறோம்.** சிலவேளைகளில், நாம் தேவன் வெறுமனே தம்முடைய கட்டளைகளை 1,2,3,4 என்பது போல எழுதியிருந்தார் என்ற கூற்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், அவர் அவ்வாறு செய்திருப்பாரென்றால், அது இழந்து போவதற்கு அல்லது தவறானமொழி பெயர்ப்பு ஏற்படும்படிக்கு உண்மையின் ஒரு தனித்த பதிவேடுக்கான மிக சுலபமாக என்றென்றுமாய் அழிந்துபோயிருக்கும். மாறாக, தேவன் இரு-நோக்க திட்டத்தை ஏற்படுத்தினார். ஒன்று எண்ணற்ற பகுதிகளில் சத்தியத்தைக் குறிப்பிடுவதிலும், அவர் அதனுடைய பாதுகாப்பிற்கான உறுதியையும் அளித்துள்ளார். ஒருவரும் தவறான மொழிபெயர்ப்பிற்காக எல்லா பகுதிகளையும் நிர்ணயிக்க முடியாது; மாறாமல் ஒரே மாதிரியாக, ஒரு சிறிய விஷயத்தில் கூட, பல பகுதிகள் மறுபரிசீலனைபடுத்தப்படுகிறது. இது ஒருவேளை பார்ப்பதற்கு "முரண்பாடாக" தோன்றும், ஆனால் மாணவர்கள் மனதில் இது சிவப்புக் கொடியாக உயர்ந்திருக்கும். மற்ற மொழிபெயர்ப்போடு ஒத்துப்பார்க்கவும் தவறுகளை தவறான மொழிபெயர்ப்பில் கண்டுபிடிக்கவும் அவனுக்கு இது காரணமாக அமையலாம்.

தேவனுடைய ஞானத்திலிருந்து இரண்டாவது பலன் எண்ணற்ற பகுதிகளின் அதே சத்தியத்தின் இயற்கையான தங்க தாதுவளம் நிறைந்த பகுதியில் அந்த மாணவன் தொடர்ந்து ஆராய்ந்து தேடுவதிலிருந்து தன்னுடைய அறிவை இந்த குறிபிட்ட காரியத்தின் மேல் அதிகரித்துக் கொள்கிறான். எப்போதும் அதிகமாக கற்றிருக்க வேண்டும் என்ற உணர்வுடையவனாக, அவன் "தினமும் வேதாகமத்தை ஆராய்ந்து பார்ப்பதில்..." (அப்.17:11) ஆவலுள்ளவனாய் இருப்பான்.

☐ **மூன்றாவது, தேவன் குறிப்பிட்ட சத்தியங்களை பாதுகாக்க "தணிக்கைகளை" தவறானவற்றிற்கு எதிராக நுழைக்கின்றார்.** பல வருடங்களாக என்னுடைய தனிப்பட்ட ஆய்வில், நான் மதக்கோட்பாடுகளைத் தவறாகக் கற்பிக்க சாதகமான "பாடப்பகுதிகளை" வழக்கமான கூற்றுகளாக (வசனத்திற்கு முன்னால் அல்லது பின்னால்) தவறான போதனைக்கு எதிரான பாது காப்பைப்போல தெரிவுசெய்திருப்பதை கவனித்திருக்கிறேன் எடுத்துக்காட்டாக:

▸ **கிருபையினால் மட்டும் இரட்சிக்கப்பட்டீர்கள்..."** எபேசி.2:8 சொல்கிறது "...கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு,...இது கிரியையினால் உண்டானதல்ல" இந்தப்பகுதியில் நாம் இரட்சிக்கப் படுவதற்கு உள்ளும் புறம்பேயும் எதுவும் செய்யவேண்டியதில்லை என்று போதிக்கப்பட்டுள்ளது.



முறையை வேதாகமம் கண்டனம் செய்கிறதில்லை என்று சொல்வதற்கு ஆண்புணர்ச்சி பழக்கம் மனோபலத்தைக் கொண்டிருக்கிறது.

அத்தோடுகூட 1கொரிந்தியர் 6:9,1-ல் அபோஸ்தலனாகிய பவுல் சில மாம்ச கிரியைகளைப் பட்டியலிடுகிறார். அவைகளில் அவர் வேசிமார்க்கத்தார், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும் இன்னும் சில பாவஞ்செய்கிறவர்களைப் பற்றி பேசுகிறார், மேலும் அவர் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்கிறார்.

நிச்சயமாக ஆண்புணர்ச்சியில் ஈடுபடுவது உண்மையாகவே தேவனுக்கும் மனிதனுக்கும் விரோதமான ஒரு பாவம் என்பதை நீங்கள் காணலாம். இது இயற்கையானதல்ல மேலும் இதில் நன்மையான எதுவும் கிடையாது. நீங்கள் இதுபோன்ற எந்த குற்றத்தையும் செய்கிறவர்களாயிருக்கக் கூடாதென்று நான் ஜெபிக்கிறேன். இப்படியிருப்பீர்களென்றால் அதற்காக நீங்கள் மனந்திரும்ப வேண்டுமென உங்களை உற்சாகப்படுத்துகிறேன். உங்களுக்குப் பிள்ளைகள் இருக்குமானால் உங்களை இப்படிப்பட்ட பழக்கத்திற்கு எதிராக எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு உற்சாகப்படுத்த விரும்புகிறேன். இப்படிப்பட்ட குணாதிசயங்கள் உங்கள் பிள்ளைகளை அதற்கு அடிமையாக்கும், அவர்களை கெடுத்துவிடும் மேலும் அவர்களை அதில் ஈடுபடச் செய்து இப்படிப்பட்ட அக்கிரமமான வாழ்வின் வழியை ஏற்றுக்கொள்ள செய்யாதிருக்கும்படிக்கும் நான் அவர்களைக் காக்கும்படி விரும்புகிறேன்.

மனுஷனும், மனுஷியும் திருமணத்தில் இணைந்து, தங்களுடைய குடும்பங்களை கொண்டு தேவபக்திக்கேதுவான வாழ்க்கை வாழ்வதே மனுஷனுக்கும் மனுஷிக்குமான தேவனுடைய வழியாக இருக்கிறது. மற்ற எந்தவிதமான வழியும் தேவ சித்தத்திற்கு விரோதமானதாயிருக்கிறது.

நீங்கள் தொடர்ந்து இக்காரியங்களைக் குறித்து சிந்தித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை பற்றி தீவிரமாக ஆலோசனை செய்வீர்களென நான் நம்புகிறேன். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறவிரும்பினால் நீங்கள் தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதன் மூலமும், தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைப்பதன் மூலமும் உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு உங்கள் பாவங்கள் கழுவப்படும்படிக்கு தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதன் மூலம் நீங்கள் கிறிஸ்தவராக மாறலாம் (மாற்.16:16; அப்.2:38) இப்படிச் செய்யும் போது கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்ளுவார் (அப்.2;47).

உங்களுடைய கேள்விகளுக்கு நாங்கள் பதில் சொல்ல முடிந்தால், இன்னொரு பாடப்பகுதியை உங்களுக்குக் கொடுத்து அல்லது உங்களுடைய கீழ்ப்படிதலில் உங்களுக்கு உதவிசெய்வோம். தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தயவு செய்து எங்களது தபால் முகவரிக்கு எங்களுக்கு எழுதியனுப்புங்கள். கர்த்தர் உங்களோடிருப்பாராக!

**வேதகம கேள்விகள்**



**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**

***தற்சோதனை பகுதி - 18***

**17. நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன?**

1. ஆரோக்கிய உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது ☐ வசன ஆதாரம்

2. நியாயப்பிரமாணம் நல்லதல்ல ☐ வசன ஆதாரம்

3. நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறது ☐ வசன ஆதாரம்

4. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனிதன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுகிறான் ☐ வசன ஆதாரம்

5. நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தும் உபாத்தியாயிருக்கிறது ☐ வசன ஆதாரம்

6. நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமானது ☐ வசன ஆதாரம்

7. நியாயப்பிரமாணத்தினாலே நீதிமான்களாக விரும்புகிறவர்கள் கிறிஸ்துவை விட்டு பிரிந்து விழுந்துபோகிறார்கள் ☐ வசன ஆதாரம்

8. நியாயப்பிரமாணம் வரப்போகிற நன்மைகளின் பொருளாயிருந்தது ☐ வசன ஆதாரம்

9. இரண்டாவதை நிலைநிறுத்த முதலாவதை நீக்கிப்போடுகிறார் ☐ வசன ஆதாரம்

10. முதலாம் உடன்படிக்கை பிழையற்றது ☐ வசன ஆதாரம்

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*




பெண்கள் பகுதி

## வேதாகமத்தில் பாதுகாப்புகள்
## Safeguards in Scripture

*-Betty*

தேவன் எவ்வளவு ஞானமுள்ளவர், வேதாகமத்தில் அவருடைய ஞானம் எவ்வளவு அழகாக விவரிக்கப்பட்டுள்ளது! "எப்படி என்று?" நீங்கள் கேட்பீர்கள், உங்களோடு கூட அவருடைய ஞானத்தின் சாட்சிகளை நான் ஆராய்ச்சி செய்யட்டும்:

☐ **முதலாவது, அவருடைய வெளிப்பாடுகள், வழிநடத்துதல்கள், எச்சரிக்கைகள் மேலும் வாக்குத்தத்தங்கள் சிறந்த சாத்தியமான வழியில் நிறைவேற்றப்படும்படிக்கு அவர் இவற்றையெல்லாம் காக்கும்படி தெரிந்தெடுத்த வழிமுறைகள்:** அந்த வழிமுறைகள் என்ன? இது எழுதப்பட்ட பதிவேடு, முதலாவது நிறைவேற்றப்பட்ட அற்புதங்கள் அடையாளங்கள் சமயோசித ஞானத்தில் உறுதியாக்கப்பட்டது.

ஏன் "எழுதப்பட்ட வார்த்தைகள்" சொற்களாலான செய்திகள் தொடர்ந்து சொல்லப்பட தெரிவுசெய்யப்பட்டுள்ளது? ஏனென்றால் வேதாகமம் முழுவதும் வெளிப்படுத்தப்பட்டவை, அதிலிருந்து ஒன்றும் கூட்டக்கூடாது அல்லது குறைக்கக்கூடாது என்று எச்சரிப்புடன் முடிக்கப்பட்டுள்ளது. கூடுதலான எந்த வெளிப்பாடுகளும் தேவனால் கொடுக்கப்படவில்லை; அவருடைய வார்த்தை முற்றுபெற்றாயிற்று: "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோ.3:16,17).

இன்று தங்களோடு தேவன் நேரடியாக பேசுகிறார் என்றும், தங்களுக்கு ஒரு புதிய செய்தியை கொடுத்திருக்கிறாரென்றும் உரிமை பாராட்டிக்கொண்டிருக்கிற போலித்தனமான மதத் தலைவர்கள் இருக்கின்றனர். அப்படியிருந்தால், பல நூற்றாண்டுகளாக, மனிதனோடு தேவனுடைய தொடர்ச்சியான தொடர்புகொள்ளும் வழி நேரடியானதும், தனிப்பட்ட வெளிப்பாடும், நாம் ஒவ்வொருவருடைய இரக்கத்தைச் சார்ந்து ஆத்ம உணர்ச்சியை சொந்தம் பாராட்டிக்கொண்டிருப்பவர்களாய் இருக்க வேண்டியிருக்கும் (எபே.4:11-15). அதிகக் கூட்டமானவர்களுக்கிடையே யுள்ள தொடர்பு இன்றைய நாளில் எப்படியுள்ளது, இது உண்மையாகவே உண்மையான "தீர்க்கதரிசிக்கும்" ஒரு கள்ளத்தீர்க்கதரிசிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை கண்டுகொள்வது நமக்கு இயலாததாக இருக்கிறது. இயேசு மத்தேயு 24:24-ல் கள்ளப் போதகர்கள் அவருடைய நாமத்தில் எழும்புவார்கள் என்று எச்சரித்தார். பழைய ஏற்பாட்டிலும் கூட, தேவன் "தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது..." (ஏரே.5:31) என்று எச்சரித்தார்.

உறுதிப்படுத்தப்பட்டு எழுதப்பட்ட செய்தியான வேதாகமத்தை கொண்டிருக்கையில், நாம் இப்படிப்பட்ட விழுதலுக்குக்கேதுவான